**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII /XXV Code of Criminal Procedure / BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No. 748/2025 | Date | : 06.04.2026 |
| Deposition of Witness for | : **அ.சா**. 1 | Taluk | : |
| Name | : **ஈஸ்வரி** | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 06.04.2026

(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் ஈரோடு சூரம்பட்டி கிராமடையில் குடியிருந்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகம் இல்லை. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 09.00 மணியளவில் எனது உடல்நலம் சரியில்லாத கணவரை பாத்ரூமிற்கு அழைத்துச் செல்வதற்காக நான் வீட்டு முன்பு உள்ள பாத்ரூமிற்கு அழைத்து வந்துவிட்டு திரும்ப வீட்டிற்குள் செல்லும்போது, வீட்டிற்குள் இருந்து எங்கள் வீட்டுக்கு பின்னால் குடியிருக்கும் ஒரு பையன் ஓடினான். உடனே நான் வீட்டிற்குள் சென்று பார்த்தபோது பீரோவில் இருந்த தோடு வைக்கப்பட்டிருந்த பெட்டி கீழே கிடந்தது. அதிலிருந்த தோட்டை காணவில்லை. அந்தப் பையன் எடுத்துச் சென்றது தெரியவந்தது. அந்த பையனை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள நபர்தான் என் வீட்டு பின்னால் குடியிருக்கும் நபர் ஆவார். அவர் தான் அன்று வீட்டில் இருந்து வெளியே ஓடி வந்தவர். என் தோடு காணாமல் போனது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. பின்பு போலீசார் ஒருநாள் என்னுடைய நகை கிடைத்து விட்டதாகவும், நகையையும் திருடிய நபரையும் வந்து அடையாளம் காட்டுமாறு காவல் நிலையத்திற்கு வர சொன்னார்கள். நான் அங்கு சென்று அடையாளம் காட்டினேன். தற்போது புகைப்படத்தில் காண்பிக்கப்படும் தங்கத்தோடு என்னுடையதுதான். அதை நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுச் சென்றேன். **(புகைப்படம் அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இன்று நான் நீதிமன்றத்தில் இருந்து பெற்றுச் சென்ற என்னுடைய காணாமல் போன தங்கத்தோடு கொண்டு வந்துள்ளேன். ஆஜர் எதிரியையும் நான் காவல் நிலையத்தில் அடையாளம் காட்டினேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

1. காவல் நிலையம் சென்றபோது போலீசார் என்னை வீட்டில் நன்றாக தேடிப் பார்த்துவிட்டு வருமாறு சொன்னார்களா என்றால் ஞாபகம் இல்லை. காவல் நிலையம் சென்ற போது போலீசார் என்னிடம் சுமார் 04 அல்லது 05 கையொப்பங்கள் வாங்கினார்களா என்றால் தற்போது ஞாபகம் இல்லை. புகாரில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் நகை காணாமல் போனதாக எழுதியிருந்தது. புகார் கொடுத்த பிறகு எவ்வளவு நாட்கள் கழித்து போலீசார் என்னை அழைத்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. நகை கிடைத்து விட்டதாக போலீசார் எத்தனை நாட்கள் கழித்து சொன்னார்கள் என்றால் சுமார் நான்கு அல்லது ஐந்து நாட்கள் கழித்து சொன்னார்கள்.

2. புகாரை யார் எழுதினார்கள் என்றால் எனது மகள் ஜெயலட்சுமி எழுதினார். நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், நகை காணாமல் போகவில்லை என்றும், புகார் கொடுக்கவில்லை என்றும், காவல் நிலையம் சென்று எதிரியையும் நகையையும் அடையாளம் காண்பிக்கவில்லை என்றும், இன்றுதான் முதன் முதலாக எதிரியை போலீசார் அடையாளம் காண்பித்ததின் பேரில் எதிரியை பார்க்கிறேன் என்றும், எதிரி என்னுடைய வீட்டிற்கு வரவில்லை என்றும், அவர் ஓடியதை நான் பார்த்ததாக கூறுவது பொய் என்றும் சொன்னால் சரியல்ல.

3. நான் புகார் கொடுத்த போது எதிரியின் தந்தை பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தற்சமயம் போலீசார் சொல்லி கொடுத்ததின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

CC 653/2024 - PMO-1 BY PW-1 (DATE: 15.04.2026)
Digitally signed by S R BABU
Date: 2026.04.06 17:17:19 -0800

Judicial Magistrate No.III,

Erode.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII /XXV Code of Criminal Procedure / BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC No. 748/2025 | Date | : | 06.04.2026 |
| Deposition of Witness for | : | **அ.சா**.2 | Taluk | : | |
| Name | : | **தனசெந்தில்** | Calling | : | |
| Father Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 06.04.2026

(எதிரி ஆஜர் இல்லை, எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். எதிரியின் சார்பில் BNSS பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

நான் ஈரோடு சென்னிமலை ரோட்டில் உள்ள இ.எம்.எம் மெயின் வீதியில் குடியிருந்து சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ஈஸ்வரி எனது உறவினர் ஆவார். அவரது வீட்டில் தோடு திருடு போனது கேள்விப்பட்டு நான் அவருடைய வீட்டிற்கு 30.04.2024 ஆம் தேதி மதியம் 01.00 மணியளவில் சென்று இருந்தேன். அப்போது ஈரோடு தெற்கு போலீசார் அங்கு வந்து நகை திருடு போனது சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதில் நானும் கோகுல கிருஷ்ணன் என்பவரும் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதாகும். முதலாவது சாட்சி கையொப்பம் கோகுலகிருஷ்ணன் என்பவருடையதாகும். **(பார்வை மகஜர் அ.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து வெற்று காகிதத்தில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

CC 653/2024 - PMO-1 BY PW-1 (DATE: 15.04.2026)
Digitally signed by S R BABU
Date: 2026.04.06 17:17:34 -0800

Judicial Magistrate No.III,

Erode.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII /XXV Code of Criminal Procedure / BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No. 748/2025 | Date | : 06.04.2026 |
| Deposition of Witness for | : **அ.சா**.3 | Taluk | : |
| Name | : **சிவசங்கர்** | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 06.04.2026

(எதிரி ஆஜர் இல்லை, எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். எதிரியின் சார்பில் BNSS பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

நான் ஈரோடு சூரம்பட்டி கிராமடையில் குடியிருந்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். நான் குடியிருக்கும் ஈஸ்வரியின் வீட்டில் நகை திருடு போனது சம்பந்தமாக ஈரோடு தெற்கு போலீசார் நகை கிடைத்து விட்டதாக சொல்லி ஈஸ்வரியையும் அழைத்துக் கொண்டு என்னை காவல் நிலையத்திற்கு வர சொன்னார்கள். நாங்கள் காவல் நிலையத்திற்கு சென்ற போது அங்கு ஆஜர் எதிரி சுஜித் என்பவரும் இருந்தார். ஆஜர் எதிரி சுஜித் ஈஸ்வரியின் காலை பிடித்துக் கொண்டு இந்த ஒரு தடவை என்னை மன்னித்து விடுங்கள் என்று கெஞ்சினார். அப்போது போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி சுஜித் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது எங்கு போட்டேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். காணாமல் போன நகை கைப்பற்றியதற்காக போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். **(கைப்பற்றுதல் மகஜரில் உள்ள**

**முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**
போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-**

ஈஸ்வரியின் காம்பவுண்டு வீட்டில் தான் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எதிரி சுஜித் எங்கு குடியிருக்கிறார் என்றால் அவர் எங்கள் வீட்டு பின்னால் கீழ் வீட்டில் குடியிருந்து வருகிறார். ஈஸ்வரியின் வீட்டில் தங்கத்தோடு காணாமல் போன விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். 30.04.2024 ஆம் தேதி மாலை 03:30 மணிக்கு பெரியார் நகரில் என் முன்னிலையில் ஆஜர் எதிரியை போலீசார் கைது செய்தார்களா என்றால் இல்லை. போலீசார் என்னை காவல் நிலையத்திற்கு வர சொன்னார்கள். பெரியார் நகரில் ஆர்ச் அருகில் ஆஜர் எதிரி தன் குற்றத்தை என் முன்னிலையில் ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் இல்லை. அவரிடம் இருந்து போலீசார் தங்கத்தோட்டை கைப்பற்றினார்கள் என்றால் இல்லை. காவல் நிலையத்தில் தான் தங்கத்தோட்டை கொடுத்தார். நான் பெரியார் நகர் ஆர்சில் அருகில் கையொப்பம் செய்துவிட்டு காவல் நிலையத்தில் கையொப்பம் செய்ததாக ஆஜர் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU
CC 653/2024 - PMO-1 BY PW-1 (DATE: 15.04.2026)
Digitally signed by S R BABU
Date: 2026.04.06 17:17:46 -0800
Judicial Magistrate No.III,

Erode